## 200 தொகுதிகளை வெற்றி இலக்காகக் கொண்டு

# களப் பணிகளைத் தொடங்க வேண்டும்!

## கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஆக.18-**

**வரும் சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளை வெற்றி இலக்காகக் கொண்டு களப்பணிகளைத் தொடங்க வேண்டும் என்று கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (16.8.2024), காலை, சென்னை, கலைஞர் அரங்கில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு நடைபெறும் முதல் மாவட்டச் செயலாளர் கூட்டம் என்பதால், 'நாற்பதுக்கு நாற்பது' வெற்றியை ஈட்டித் தந்த, ஆற்றல்மிகு மாவட்டச் செயலாளர்களுக்கும் தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இந்த நன்றியை உங்கள் மூலமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு தொண்டரின் இதயத்துக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இதற்கு முன்பு யாரும் பெற்றிராத வெற்றி!**

இந்த வெற்றி சாதாரண வெற்றி இல்லை; சாதாரணமாகவும் இது கிடைத்துவிடவில்லை. 2019ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நாற்பதுக்கு 39 பெற்றோம். 2024 தேர்தல்களிலும் நாற்பதுக்கு நாற்பது பெற்றோம். இரண்டு தேர்தலில் முழுமையான வெற்றியை இதுவரை யாரும் பெற்றது இல்லை; நாமும் இதற்கு முன்பு பெற்றது இல்லை!

இந்த வெற்றிக்கு உங்களது உழைப்பு, உங்களது செயல்பாடு மிக மிக அடிப்படையாக அமைந்திருந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை!

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியை ஆவணப்படுத்தி, 'தென் திசையின் தீர்ப்பு' என்ற நூலை உருவாக்கி வழங்கியிருக்கிறேன். அதை பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் வெளியிட, பொருளாளர் டி.ஆர். பாலு அவர்கள் பெற்றுக் கொண்டுள்ளார். பொதுச்செயலாளர் அவர்களுக்கும், பொருளாளர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் (16.8.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத் துறை அமைச்சரும், கழகப் பொதுச்செயலாளருமான துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நமது உழைப்பையும் வெற்றியையும் பதிவு செய்யும் ஆவணங்கள் அதிகம் இல்லை. அதனால்தான் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நம்முடைய எல்லாச் செயல்பாடுகளையும் 'தென் திசையின் தீர்ப்பு' எனும் இந்த நூலில் முழுமையாகத் தொகுத்து வழங்கி இருக்கிறேன். உங்கள் மாவட்டங்களில் இயங்கும் கழகம் சார்ந்த நூலகங்களிலும் - பொது நூலகங்களிலும் இந்தப் புத்தகத்தை நீங்கள் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**சுணக்கமில்லாமல் செயல்பட்டால் – அடுத்த முறையும் கழக ஆட்சிதான்!**

2019 நாடாளுமன்றத் தேர்தல் தொடங்கி, நடந்து முடிந்த விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வரை தொடர்ச்சியாக மக்கள் மன்றத்தில் வென்றிருக்கிறோம். சுணக்கமில்லாமல் செயல்பட்டால், அடுத்த முறையும் நம்முடைய கழக ஆட்சி என்பதால் சந்தேகமில்லை. அதற்கு தயாராகும் வகையில், நாம் களப்பணிகளைத் தொடங்க வேண்டும்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு தேர்தலை மனதில் வைத்தே செயல்பட வேண்டும். விமர்சனங்களுக்கு பதில் சொல்லும் அதேவேளையில் நம்முடைய சாதனைகளையும் மக்கள் மன்றத்தில் எடுத்து வைக்க வேண்டும். 2026 சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய இலக்கு 200 தொகுதிகள் என்று நான் சும்மா ஏதோ மேடைப் பேச்சுக்காகக் குறிப்பிடவில்லை. அந்த அளவுக்கு நலத்திட்டப் பணிகளைச் செய்திருக்கிறோம். மக்களிடம் நற்பெயரை வாங்கியிருக்கிறோம். தமிழ்நாட்டின் எந்த ஒரு வீட்டை எடுத்துக் கொண்டாலும் அந்த வீட்டில் ஒருவராவது பயனடையும் வகையில்தான் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மக்களைச் சென்று சேர்ந்திருக்கும் நலத்திட்டங்கள் எல்லாம் வாக்குகளாக மாற வேண்டும் என்றால் அதற்கு நம்முடைய களப்பணி மிக மிக அவசியம். அதற்கு இப்போதே நாம் உழைக்க வேண்டும்.

நான் முதலீடுகளை ஈர்ப்பதற்காக வரும் 27ஆம் தேதி இரவு அமெரிக்காவிற்குப் புறப்பட இருக்கிறேன். தீர்மானத்தில் சொன்னபடி, முப்பெரும் விழாவிற்கான பணிகளைச் செய்து முடிப்பதோடு - நான் இப்போது சொல்லியிருக்கும் பணிகளையும் செய்யத் தொடங்கியிருக்க வேண்டும். நான் அமெரிக்காவில் இருந்தாலும் தலைமைக் கழகம் மூலமாக இதையெல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருப்பேன்.

**உலகத்தில் வேறு எந்தத் தலைவருக்கும் – இப்படி சிறப்புகள் செய்யப்பட்டது இல்லை!**

நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசு சார்பிலும், கழகத்தின் சார்பிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறோம். நாளை மறுநாள் தலைவர் கலைஞர் உருவம் பொறித்த நூறு ரூபாய் நாணயம் வெளியிடப்பட இருக்கிறது. அதில் நீங்கள் எல்லாரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உலகத்தில் எந்தத் தலைவருக்கும் இப்படி சிறப்புகள் செய்யப்பட்டது இல்லை என்ற அளவிற்கு கொண்டாடி இருக்கிறோம். இதன் தொடர்ச்சியாக, வரும் முப்பெரும் விழாவில் கழகத்தின் பவள விழா நிறைவும், தீர்மானத்தில் சொன்னபடி மிகச்சிறப்பாக நடைபெற வேண்டும்.

கழகம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு மாநிலக் கட்சி ஆட்சியைப் பிடித்த வரலாறு தமிழ்நாட்டுக்குத்தான் சொந்தம்! அந்த வரலாற்றை எழுதியது நாம்தான்!

கட்சி தொடங்கி 75 ஆண்டுகள் ஆனபிறகும் ஆட்சியில் இருக்கும் இயக்கமும் நம்முடையதுதான். அப்படிப்பட்ட தருணத்தில் கோடிக்கணக்கான தொண்டர்கள் இருக்கும் இந்த இயக்கத்தில், நானும் நீங்களும் பல்வேறு கட்சிப் பொறுப்புகளில் இருக்கிறோம் என்பது நமக்கெல்லாம் கிடைத்த மிகப்பெரிய பெருமை!

**நமக்குள்ள வரலாற்றுக் கடமை!**

75 ஆண்டுகள் கடந்துவிட்ட இந்த இயக்கத்தின் தேவை இன்னும் நூறு ஆண்டுகளுக்கு இருக்கிறது. ஆலமரமாக இந்த இயக்கம் வேரூன்றி நிற்கிறது என்றால், அதற்குக் காரணம், இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு, கோடிக்கணக்கானவர்களின் உழைப்பும் - தியாகமும் உரமாக்கப்பட்டிருக்கிறது. அதன் பயனைத்தான் இன்றைக்கு நாம் அனுபவிக்கிறோம். அதேமாதிரி, இந்த இயக்கத்தை அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு சேர்க்க வேண்டிய மாபெரும் வரலாற்றுக் கடமையும் நம்முடைய கைகளில் இருக்கிறது. அதற்கான உழைப்பை வழங்க – உங்களை நீங்கள் முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் – கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றினார்.

---



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (16.08.2024) நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் வெள்ளத்தடுப்புப் பணிகள் தொடர்பாக சேவைத்துறைகளுடனான ஆய்வுக் கூட்டம் ரிப்பன் வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன் (மத்திய சென்னை), டாக்டர் கலாநிதி வீராசாமி (வட சென்னை), முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் (தென் சென்னை), சசிகாந்த் செந்தில் (திருவள்ளூர்), சட்டமன்ற உறுப்பினர்கள். துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.மணிவாசன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், கூடுதல்/இணை/துணை ஆணையாளர்கள், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர், நிலைக்குழுத் தலைவர்கள், நியமனக் குழு உறுப்பினர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் மற்றும் சேவைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய சரித்திர சாதனை ஆவணம்!

## "நாடாளுமன்றத் தேர்தல் 2024 - 40/40 தென் திசையின் தீர்ப்பு"

### பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் வெளியிட பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. பெற்றுக் கொண்டார்!

சென்னை, ஆக.18-

சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய "நாடாளுமன்றத் தேர்தல் 2024 - 40/40 தென் திசையின் தீர்ப்பு" எனும் வரலாற்றுத் தேர்தல் ஆவண நூல் வெளியிடப்பட்டது.

நீர்வளத்துறை அமைச்சரும், கழகப் பொதுச்செயலாளருமான துரைமுருகன் அவர்கள் இந்நூலை வெளியிட, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் "நாடாளுமன்றத் தேர்தல் 2024 - 40/40 தென் திசையின் தீர்ப்பு" நூலினை நீர்வளத்துறை அமைச்சரும், கழகப் பொதுச்செயலாளருமான துரைமுருகன் அவர்கள் வெளியிட, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

18வது நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் சர்வாதிகாரத்திற்கும், ஜனநாயகத்திற்கும் இடையே நடைபெற்ற போர் ஆகும்.

பா.ஜ.க. 400 இடங்களை கைப்பற்றுவோம் என்று சூளுரைத்தது. ஆனால், தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலையை இந்தியா கூட்டணி ஏற்படுத்தியது.

**சரித்திர சாதனை ஆவணம்**

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யில் நாற்பதுக்கு நாற்பது என்கிற வரலாற்று வெற்றியை தி.மு.க. கூட்டணி பெற்றதை குறித்து முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய 40/40 தென் திசையின் தீர்ப்பு புத்தகம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இப்புத்தகம், பெற்ற வரலாற்று வெற்றியை சரித்திர சாதனை ஆவணமாக பதிவு செய்கிறது.

இந்நூலில் 2024 மக்களவைத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது வெற்றியை தி.மு.க. கூட்டணி எப்படிச் சாத்தியமாக்கியது? கழகத் தலைவர் அவர்கள் அமைத்த தேர்தல் வியூகம், 2023ல் இந்தியா கூட்டணிக்கு வித்திட்ட சென்னை ஒய்.எம்.சி.ஏவில் நடைபெற்ற அவரது பிறந்தநாள் விழா, பாட்னா, பெங்களூரு, மும்பை ஆகிய இடங்களில் நடந்த இந்தியா கூட்டணிக் கூட்டங்கள், தி.மு.க. வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட பயிலரங்கம், கூட்டணிக் கட்சிகளுக்கிடையே நடைபெற்ற தொகுதிப் பங்கீடு, தி.மு.க. தேர்தல் அறிக்கை, கழக வேட்பாளர்கள் பற்றிய விவரங்கள், கழகத் தலைவர் அவர்கள் பங்கேற்ற தேர்தல் பரப்புரை கூட்டங்கள், பல்வேறு ஊடகங்களுக்கு அவர் அளித்த சிறப்புப் பேட்டிகள், தி.மு.க.வின் தேர்தல் விளம்பரங்கள், 40/40 வெற்றியை பெற்ற தேர்தல் முடிவுகள், முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் வென்ற தேர்தல்கள், அதன் புள்ளிவிவரங்கள், ஏராளமான படங்கள், இன்ஃபோகிராபிக் என விரிவாகப் பதிவு செய்திருக்கிறது "நாடாளுமன்றத் தேர்தல் 2024 - 40/40 தென் திசையின் தீர்ப்பு" நூல்.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும், கழக முதன்மைச் செயலாளருமான கே.என். நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் அமைச்சர்கள் ஐ. பெரியசாமி, முனைவர். க. பொன்முடி, ஆ. இராசா எம்.பி., அந்தியூர் ப. செல்வராஜ் எம்.பி., திருமதி. கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக மாவட்டச் செயலாளர்கள், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ். ஆஸ்டின், ப. தாயகம் கவி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.